ஏயப்பன்னினனின்னன தன்னுயிர்
தேயக்கன்றுபிடியுறத்தீங்குறு
தாயைப்போலத்தளர்ந்தமயர்ந்தனள்
நீயைச்சுட்டதொர்கற்பெனுந்தீயினுள். (கூசு)

பெருந்தகைப்பெரியோனைப்பிணித்தபோர்
முருந்தன்மற்றையுலகொருமூன்றையும்
அருந்தவப்பயனுலரசாள்கின்றுன்
இருந்தவப்பெருங்கோயில்சென்றெய்தினுன். (கூஎ)

வே று.

† தலங்கண்மூன்றிற்கும்பிறிதொருமதிதழைத்தென்ன
அலங்கல்வெண்குடைத்தண்ணிழலவிரொளிபரப்ப
வலங்கொடோளிஞன்மண்ணின்றுவானுறவெடுத்த
பொலங்கொண்மாமணிவெள்ளியங்குன்றெனப்பொலிய. (கூஅ)

புள்ளுயர்த்தவன்றிகிரியும்புரந்தானையிலும்
தள்ளின்மூக்கணுன் ‡ கணிச்சியுந்தாக்கியதழும்பும்
கள்ளுயிர்க்குமென்குழலியர்முகிழ்வீரற்கதிர்வாள்
வள்ளுகிர்ப்பெருங்குறிகளும்புயங்களின்வயங்க. (கூக)

தன்றுசெம்மயிர்ச்சுடர்நெடுங்கற்றைகள்சுற்றி
நின்றுதிக்குறுசிரல்படக்கதிர்க்குழாதிரை
ஒன்றுசீற்றத்தினுயிர்ப்பெனும்பெரும்புகையுயிர்ப்பத்
தென்றிசைக்குமோர்வடவனறிருத்தியதென்ன. (சஅ)

மரகதக்கொழுங்கதிரொடுமாணிக்கநெடுவாள்
நரகதேயத்தணங்குருவிருளையுரக்கச்
சிமனேத்தையுந்திசைதொறுந்திசைதொறுஞ்செலுத்தி
உரகர்கோனினிதரசுவீற்றிருந்தனனுப்ப. (சக)

* தண்டினுய்-தடைசெய்தாய்.
† தலங்கண்மூன்று-திரிலோகம். ‡ கணிச்சி-சூலாயுதம்.

குவித்தபண்மணிக்குப்பைகள்கூலையொடுங்கொழிப்பச்
சவிச்சுடர்க்கலனணிந்தபொற்றேரொடுதயங்கப்
புவித்தடம்படர்மேருவைப்பொன்முடியென்னக்
கவித்தமாலிருங்கருங்கடலிருந்ததுகடிப்ப. (சஉ)

சிந்துராகத்தின்செறிதுகிற்கச்சொடுசெறியப்
பந்திவெண்முத்தினணிகலன்முழுகிலாப்பரப்ப
இந்துவெண்குடைநீழலிற்றுரகையினம்பூண்
டந்திவானுடித்தல்லதீற்றிருந்ததாமென்ன. (சஙட)

வண்மைக்குந்திருமறைகட்கும்வாணனும்பெரிய
திண்மைக்குந்தனியுறையுளாமுழுமுகந்திசையின்
கண்வைக்குந்தொறுங்களிற்றெருமாதிரங்காக்கும்
எண்மர்க்கும்மற்றை * யிருவர்க்கும்பெரும்பயமியற்ற. (சச)

† ஏகநாயகன்றேவியையெதிர்ந்ததற்பின்னே
நாகர்வாழ்விடமுதலெனநான்முகன்வகுக்கும்
மாகமால்விசும்பீறெனநடுவணவரைப்பில்
தோகைமாதர்கண்மைந்தரிற்றோன்றினர்சுற்ற. (சஞ)

வானரங்களும்வானவரிருவருமனிதர்
ஆனபுன்றொழிலோரெனவிகழ்ந்தின்றவரும்
ஏனைநின்றவரிருடியர்சிலரொழிந்தியாரும்
ஆவின்றவேலரக்கர்தங்குழுவொடுசுற்ற. (சசு)

ஈரம்புகண்ணகத்துள்ளுறைநிறைபாண்டில்
நிரம்புசில்லரிபாணியுங்குறடின்றிசைப்ப
அரம்பைமங்கையரமிழ்துகுத்தாலன்னபாடல்
வரம்பிலின்னிசைசெவிதொறுஞ்செவிதொறும்வழுங்க. (சஎ)

கூடுபாணியினிசையொடுமுழவொடுங்கூடத்
தோடுசீறடிவிழிமனங்கையொடுதொடரும்
ஆடலேக்குறினருந்தவமுனிவர்க்குமமைந்த
வீடுபீட்குறுமேனகைமேனகைவினங்க. (சஅ)

ஊடினார்முகத்துறுகறையொருமுகமுண்ணக்
கூடினார்முகக்கரிகறையொருமுகங்குடிப்பப்
பாடினார்முகத்தாரமுதொருமுகம்பருக
ஆடினார்முகத்தணியமுதொருமுகமருந்த. (சக)

தேவரோடிருந்தரசியலொருமுகஞ்செலுத்த
மூவரோடுமோமந்திரமொருமுகமுயலப்

* இருவர்-சேடன் திருவன். † ஏகநாயன்-ஒன்றுனகடவுள்.

பாவகாரிதன்பாவகமொருமுகம்பயிலப்
* பூவைசானகியுருவொடுமொருமுகம்பொருந்த. (இப)

காந்தண்மெல்விரற்சனகிதன்கற்பெனுங்கடலை
நீந்தியேறுவதெங்ஙனென்றொருமுகநினையச்
சாந்தனாவியகொல்கைகன்மகளிர்தற்றழுவ்தார்
ஏந்துமாடியிஞெருமுகமியல்புடனிலங்க. (இக)

பொதும்பர்வைகுதேன்புக்கருந்துதற்கம்புலரும்
மதம்பெய்வண்டெனச்சனகிமேன்மனஞ்செலமறுகி
வெதும்புவாரகம்வெந்தழிவார்கில்லிழிதீர்
ததும்புவார்விழித்தாரைவேரேடொறுத்தாக்க. (இஉ)

மாறளாவிய † மகரக்தகறவுண்டிமகளிர்
வீறளாவியமுகிழ்முலைமெழுகியசாக்தின்
சேறளாவியசிறாறுஞ்சிகரத்தென்றல்
ஊறளாவியகடலெனவுடலிடைநழைய. (இங)

திங்கள்வாணுதன்மடந்தையர்சேயரிக்கிடந்த
அங்கயற்றடந்தாமரைக்கலரியோஞ்சி
வெங்கண்வானவர்தானவரென்றிவர்விரியாப்
பொங்குகைகளாற்தாமரைக்கிழ்துவேபோன்று. (இச)

இருந்தவெண்டிசைக்கிழவனேமாருதியெதிர்ந்தான்
கருந்திணைத்தைநோக்கியகலுழனிற்கணன்முன்
திருந்துதோளிடைவீக்கியபாசத்தைச்சிக்கி
உருந்துஞ்சுபோல்பவன்வயிற்பாய்வெனென்றுடன்றான். (இஞ)

உறங்குகின்றபோதுயிருண்டல்லற்றமென்றெழிற்தேன்
பிறங்குபொன்மணியாசனத்திருக்கவும்பெற்றேன்
நிறங்களென்பலசிந்திப்பதிவன்றலேகிதறி
அறங்கொள்கொம்பினைபீட்டினகல்வேனென்றமைந்தான். (இசு)

தேவர்தானவர்முதலினர்சேவகன்றேவி
காவல்கண்டிவணிருந்தவர்கட்புலன்கதுவப்
பாவகாரிதன்முடித்தலைபறித்திலெனென்றால்
ஏவதியானினிமேற்செயுமாள்வினையென்றான். (இஎ)

மாடிருந்தமற்றிவன்புணர்மங்கையர்மயங்கி
ஊடிரிர்திடமுடித்தலேதிசைதொறுமுருட்டி
ஆடல்கொண்டிகின்றார்க்கின்றதுகொடிதம்மா
தேடிவந்தநோர்குரங்கெனும்வாசகஞ்சிறிதோ. (இஅ)

* பூவை-நாகணவாய்ப்புள் சொல்லுக்குவமை.
† மகரக்தகறவு-வாசனையுள்ள கள்.

நீண்டவாளெயிற்றரக்கனேக்கண்களினேரே
காண்டல்வேண்டியிவ்வுயிர்சுமக்கதெதிர்செகழறி
மீண்டபோதுண்டுவசைப்பொருள்வென்றிலேனெனினும்
மாண்டபோதினும்புகழன்றிமற்றுமொன்றுண்டோ. (கிக)

என்றதோளிடையிறுக்கியபாசமிற்றேகக்
குன்றின்மேலெழுகோளரியேறெனக்குதியின்
சென்றுகூடுவலென்பதுசிந்தனைசெய்யா
கின்றுகாரியமன்றெனநீதியினேக்தான். (கூ0)

(வே று.

கொல்லலாம்வலத்தனுமல்லன்கொற்றமும்
வெல்லலாந்தரத்தனுமல்லன்மிலேச்சர்
அல்லெலாந்திரண்டனிறத்தனுற்றலே
வெல்லலாமிராமனுற்பிறரும்வெல்வரோ. (கக)

என்னேயும்வெலற்கரிதிவனுக்கீண்டிவன்
தன்னேயும்வெலற்கரிதெனக்குத்தாக்கினுல்
அன்னவேகாலங்கள்கழியுமாதலான்
தன்னருஞ்செருத்தொழிறொடக்கறாயதோ. (கஉ)

ஏழுயருலகங்கள்யாவுமின்புறப்
பாழிவன்புயங்களோடரக்கன்பஸ்மலேப்
பூழியிற்புரட்டலென்பூணிப்பாமென
ஊழியான்விளம்பியவுரையுமொன்றுண்டால். (கங)

இங்கொருதிங்களேயிருப்பல்யானென
* அங்கணுயகன்றனதாணைகூறிய
மங்கையுமின்னுயிர்துறத்தல்வாய்மையால்
பொங்குவெஞ்செருவிடைப்பொழுதுபோக்கினுல். (கச)

ஆதலானமர்த்தொழிலழகிற்றன்றருந்
தாதனுந்தன்மையேதுணுய்தென்றன்னிளுன்
வேதநாயகன்றனித்துணேவன்வென்றிசால்
எதில்வாளரக்கனிருக்கையெய்தினுன். (கஎ)

நீட்டியவாளெனத்தெறுகட்டேவியர்
ஈட்டியகுழவிடையிருந்தவேந்தற்குக்
காட்டினனனுமனைக்கடலினுரமு
தூட்டியவும்பரையுலையவோட்டினுன். (கஙு)

புவனமெத்தனேயவையினத்தும்போர்க்கடந்
தவனேயுற்றரியுருவானவாண்டகை

---

* அங்கண்-அப்போது, அழகியகண்.

சிவனெனச்செங்கணெனன்னச்சேவகன்
இவனெனக்கூறினின்றிருகைகூப்பினன். (கூஎ)

சோக்கிய * கட்பொறிநுவன்றவாய்களில்
ஊக்கியபொறியொடுமயிர்கூறுக்கொளத்
தாக்கியவுயிர்ப்பொடுத்தவழுவெம்புகை
வீக்கினனவ்வுடல்விரித்தபாம்பினே. (கூஅ)

அன்னவோர்வெகுளியனமராதியர்
தன்னியதுன்னலர்த்துணுக்குஞ்சுற்றுற
எண்ணிவண்வரவுநீயாரையென்றவன்
தன்மையையினியினுன்கூற்றின்றன்மையான். (கூக)

சோமியேகுவிகியோதெடுங்கணிச்சியோ
தாமரைக்கிழவனேதறுகட்பஃறலைப்
பூமிதாங்கொருவனேபொருதுமுற்றுற
நாமமுமுருவமுங்கரத்தகண்ணினும். (எ0)

கின்றிசைத்துயிர்கவர்நீலக்காலனே
குன்றிசைத்தயிலுறவெறிந்தகொற்றனே
தென்றிசைக்கிழவனேதிசைகின்றாட்சியர்
என்றிசைக்கின்றவர்யாருன்யாவலீ. (எக)

அந்தணர்வேள்வியினுக்கியாணையின்
வந்துறவிடித்ததோர்வயவெம்பூதமோ
மூன்றுதாரமலருளோளிலங்கைமுற்றுறச்
சென்றெனத்திருத்தியதறுகட்டெய்வமோ. (எஉ)

ஆரைநீயென்னையிக்கெய்துகாரணம்
ஆருனைவிடித்தவரியவாணையால்
சோர்விலெசொல்லுதியென்னச்சொல்லினுன்
வேறொருமெமராற்றம்புகழ்வீழுங்கினுன். (எங)

சொல்லியவனைவருமல்லென்சொன்னவப்
புல்லியவலியினேரவல்பூண்டிலேன்
அல்லியங்கமலமேயனையசெங்கணோர்
வில்லிதன்றூதன்யானிலங்கைமேயினேன். (எச)

அனையவன்யாரெனவறியாதியேல்
முனைவருமமராருமூவர்தேவரும்
எனையவரெனையவர்யாவர்யாவையும்
நினைவருமிருவினைமுடிக்கநின்றனேன். (எடு)

* கட்பொறி-கண்ணுடைய அறிவு.

வேறு.

ஈட்டியவலியுமேனளியற்றியதவமும்யாணர்
கூட்டியபடையுந்தேவர்கொடுத்தகல்வரமுங்கொட்பும்
நீட்டியபிறவுமெய்நித்திருத்தியவாழ்வுமெல்லாம்
நீட்டியபகழியொன்றுமுதலொடீக்கநின்றான். (எசு)

தேவரும்பிறருமல்லன் நிசைக்களிறல்லன் றிக்கிற்
காவலரல்லனீசன்கயிலையங்கிரியுமல்லன்
மூவருமல்லன்மற்றை * முனிவருமல்லனெல்லைப்
பூவலயத்தையாண்டபுரவலன்புதல்வன்போலாம். (எள)

போதமும்பொருந்துகேள்விப்புரையறுபயனும்பொய்தீர்
மாதவஞ்சார்ந்ததீராவரங்களுமற்றுமுற்றம்
யாதவனினேற்றானன்னபயத்தனவேதுவேண்டின்
வேதமுமறனுஞ்சொல்லுமெய்யறமூர்த்திவில்லோன். (எஅ)

காரணங்கேட்டியாயிற்கடையிலாமறையின்கண்ணும்
ஆரணங்காட்டமாட்டாவறிவினுக்கறிவுமன்னோன்
போரணங்கிடங்கர்கவ்வப்பொதுநின்றமுதலேயென்ற
வாரணங்காக்கவந்தானமரைக்காக்கவந்தான். (எக)

மூலமூகவுமீறுமில்லதோர்மும்மைத்தாய
காலமுங்கணக்குநீத்தகாரணங்களிலேக்கிச்
சூலமுக்கிரிசங்குகரமுந்தறக்குதொல்லே
ஆலமுமலரும்வெள்ளிப்பொருப்பும்விட்டயோத்திவந்தான். (அo)

அறக்கலேறுத்திலேதமருள்சுரந்தறைக்கநீத்தி
றக்தெரிக்தலகம்பூணச்செக்நெறிசெலுத்தித்தீயோர்
இறக்தகனறித்தக்கோரிடர்தடைத்தேதகவிண்டு
† பிறக்தனன்றன்பெற்பாதமேத்துவார்பிறப்பறப்பான். (அக)

அண்ணவற்கடிமைசெய்வேனுமமுமனுமனென்பேன்
நண்ணுதறன்னேத்தேதடிநாற்பெருந்திசையும்போந்த
மன்னரிற்றென்பால்வந்ததானைக்குமன்னன்வாலி
தன்மகனவன்றன்றூதன்வந்தனென்றனியேனென்றான். (அஉ)

என்றலுமிலங்கைவேந்தனெயிற்றினமெழிலிகாப்பண்
மின்றிரிக்தென்னகக்குவாலிசேய்விடுத்ததூத
வன்றிறலாயவாலிவலியன்கொலரசின்வாழ்க்கை
நன்றுகொலென்னலோடுகாயகன்றூதனக்கான். (அங)

அஞ்சலேயரக்கர்பார்லிட்டந்தரமடைந்தானன்றே
வெஞ்சினவாலிமீளான்வாலும்போய்விளிக்ததன்றே

* முனிவர்- ஈண்டு சனகாதியர். † ஈண்டுப்பிறந்தனனென்றல் இவ்வுல
கத்தவதரித்தானதன்பொற்பாதமேத்துவார்பிறப்பறக்கவல்லவன்என்க

அஞ்சனமேனியான் றனதுகேணியொன்றுண்மாழ்கித்
தஞ்சினனெங்கள்வேந்தன்குரியன்றோன்றலென்றான். (அச)

எண்ணுடையீட்டினுலவ்வாலியையெறுழ்வாயம்பால்
இன்னுயிருண்டநிற்போதியாண்டையானிராமனென்பான்
அன்னவன்றேவிதன்னேயத்தனுடலுற்ற
தன்மையையுரைசெய்கென்றச்சமீரணன்றனயன்சொல்வான். (அடு)

தேவியைகாடிவந்தசெங்கணற்கெங்கள்கோமான்
ஆவியொன்றுகாட்டானருந்துயர்துடைத்தியென்ன
ஓலியர்க்கெழுதவொண்ணுவருவத்தனுருமையோடும்
கோலியற்செல்வமுன்னேகொடித்துவாலியையுங்கொன்றான். (அக)

ஆயவன்றன்னேடாண்டோர் * நிங்களோர்கான்கும்வைகி
மேயவெஞ்சேனைசூழவீற்றினிதிருந்தவீரன்
போயினிரீடுமென்னப்போந்தனம்புகுந்தநீதென்
றேயவன்றாதன்சொன்னனிராவணனினச்சொன்னான். (அஎ)

உங்குலத்தலைவன்றன்னேடொப்பிலாவுயர்ச்சியோனே
வெங்கொலையம்பிற்கொன்றுற்காட்டொழின்மேற்கொண்டீரேல்
எங்குலப்புறநுஞ்சீர்த்திறுமிமொடுமியைந்ததென்குரல்
மங்குலிற்பொலிக்தனூலமாதுமையுடைத்துமாதோ. (அசு)

தம்முனைக்கொல்வித்தன்னற்கொன்றவற்கன்புசான்ற
உம்பினத்தலைவனேயாதெனக்குணர்ந்தலுற்ற
தெம்முனைத்தூதுவந்தாயிகல்புரிதன்மையென்னே
றும்மினைக்கொல்லாதெஞ்சமஞ்சலேறுவறியென்றான். (அஅ)

வேறு.

துணர்த்தசாரவன்சொல்லியசொற்கேளாப்
புணர்த்துகோக்கிப்பொதுகின்றதியை
உணர்த்தினுலதுமெனவுன்னருங்
குணத்தினுனுமினேயனகூறினான். (அ0)

அதுவந்தகுரியன்கான்முனே
ஏதுவொன்றியதியையெய்தன
சாதவென்றுணர்ந்திற்றியேற்றக்கன
கோதிறந்தனநின்வயிற்கூறுவாம். (அக)

வறிதுவீழ்த்தனேவாழ்க்கையமன்றம்
சிறிதுகோக்கலீமைதிருத்தினுய்
இறுதியுற்றுளதாயினுமின்னுமோர்
உறுதிகேட்டியுயிர்கெடிதோம்புவாய். (அஉ)

* நிங்களோராறு எனப் பாடமுமுண்டு.

போயிற்றீர் நும்புலன்வென் றுபோற்றிய
ஆயிற்றீர்வரிதாகியமாதவம்
காயிற்றீர்வருங்கேடருங்கற்பினுள்
தீயிற்றாயவளைத்தியர்செய்ததால். (கஙட)

இன்றுவீந்ததுகாளைசிறிதிறை
கின்றுவீந்ததலாணிறைநீர்குமோ
ஒன்றுவீந்ததுகல்லுணரும்பரை
வென்றுவீங்கியவீக்கமிருத்ததால். (கச)

தீமைகண்மையத்தீர்த்தலொல்லாதெனும்
வாய்மைநீக்கினேமாதவத்தால்வந்த
தாய்மைதாயவடன்மையிற்றோன்றிய
நோய்மையாற்றுடைக்கின்றனேகோக்கலாய். (கஞ)

திறந்திறம்பிய * காமச்செருக்கினுல்
மறந்துதத்தமதியின்மயக்கினர்
இறந்திறந்திழிந்தேறுவதேயலால்
அறந்திறம்பினராருளராயினர். (கஙு)

காமத்தாழ்கடன்ஞாலத்தவித்தவர்
ஈமத்தான்மறைந்தாரினமாதர்பால்
காமத்தாலிறந்தார்களிவண்ணறை
தாமத்தாரினரெண்ணினுஞ்சால்வரோ. (கஙஎ)

பொருளுங்காமமுமென்றிவைபோக்கிவே
றிருளுண்டாமெனவெண்ணலரீதலும்
அருளுங்காதலிற்றீர்தலுமல்லதோர்
தெருளுண்டாமெனவெண்ணலர்சீரியோர். (கஙஅ)

இச்சைத்தன்மையினிற்பிற † ரில்லினே
கச்சிகாளுகையுறாணிலன்
பச்சைமேனிபுலர்ந்துபழிபடூஉம்
கொச்சையாண்மையுஞ்சீர்மையிற்கூடுமோ. (கஙக)

ஓதநீருலகாண்டவருன்றுணைப்
போதநீதியராருளர்போயினர்
வேதநீதிவிதிவழிச்செல்வரும்
காதனீயறத்தெல்லைகடத்தியோ. (கஅஂ)

வெறுப்புண்டாயவொருத்தியைவேண்டினுல்
மறுப்புண்டாயபின்வாழ்கின்றவாழ்வினின்

---

* காமச்செருக்கு - காமமயக்கம். † இல்லினே – மனைவியை.

உறப்புண்டாய்நடுவோங்கியாகியை
அறப்புண்டாலதழகெனலாகுமே. (கஅக)

பாரைஞ்ஞூறுவபற்பலபொற்புயம்
ஈரைஞ்ஞூறுதலேயுளவென்னினும்
ஊரைஞ்ஞூறுங்கடுக்கனலுட்பொதி
சீரைஞ்ஞூறவைசேமஞ்செலுத்துமோ. (கஅஉ)

புரம்பிழைப்பருக்கீப்புகப்பொங்கியோன்
நரம்பிழைத்தனபாடலினல்கிய
வரம்பிழைக்குமறைபிழையாதவன்
சரம்பிழைக்குமென்றெண்ணுதல்சாலுமோ. (கஅஊ)

ஈறிலாஞ்சுகவெஞ்சலினற்றிரு
நூறிகொய்தினையாகிநுழைதியோ
வேறுமின்னுகையாம்வினைத்தொழில்
தேறினர்பலர்காமக்குஞ்செவ்வியோய். (கஅசு)

பிறந்துளார்பிறவாதபெரும்பதம்
சிறந்துளார்மற்றுந்தேவர்க்குந்தேவராய்
இறந்துளார்பிறர்யாருமிலாமையே
மறந்துளாருளராகிலர்வாய்மையால். (கஅஎ)

ஆதலாற்றனரும்பெறற்செல்வமும்
ஓதுபல்கினையும்முயிரும்பெறச்
சீதையைத்தருகென்றெனச்செப்பினுன்
சோதியாண்மகனிற்கெனச்சொல்லினுன். (கஅஙு)

என்றலும்மிவைசொல்லியதற்கொரு
குன்றில்வாழுங்குரங்குகொலாமிது
கன்றுகன்றெனமாகைசெய்தனன்
வென்றியென்றெருன்றுதானன்றிவேறிலான். (கஅஏ)

குரக்குவார்த்தையுமாணிடர்கொற்றமும்
இருக்கநிற்கீயென்கொலடாவிரும்
புரத்திணிட்டருந்துபுகுத்தபின்
அரக்கரைக்கொன்றதலீதுரையாயென்றுன். (கஅஅ)

காட்டுவாரின்மையாற்கடிகாவினை
வாட்டினேனெனன்னைக்கொல்லவந்தார்களே
வீட்டினேன்பின்னுமென்மையிஞலுன்றன்
மாட்டுவந்ததுகாணுமதியிஞல். (கஅக)

என்னுமாத்திரத்தீண்டெரிசீண்டுக
மின்னும்வாளெயிற்றன்சினம்வீங்கினுன்

கொன்மினென்றனன்கொல்லியர்சேர்தலும்
தின்மினென்றனன் * வீடணனீதியான். (கசஅ)

ஆண்டெழுந்ததின்றண்ணலரக்கனே
நீண்டகையன்வணங்கினனீதியான்
மூண்டகோபமுறையதன்றுமென
வேண்டுமெய்யுரைபையவிளம்பினன். (கசக)

வேறு.

அந்தணனுலகமூன்றுமாதியினறத்தினுமறல்
தந்தவனன்புக்கான்றதவதெறியுணர்ந்ததக்கோய்
இந்திரன்கருமமாற்றுமிறைவனீயியம்புது
வந்தனெனென்றபின்புங்கொல்லியோமறைகள்வல்லோய். (கசஉ)

பூதலப்பரப்பினண்டப்பொருட்டினுட்புறத்துட்பொய்தீர்
வேதமுற்றியங்குவைப்பின்வேறுவேறிடத்துவேந்தர்
மாதரைக்கொலைசெய்தார்களுளரெனவரினும்வந்த
தூதரைக்கொன்றுளார்கள்யாவரேதொல்லைநல்லோர். (கசஙூ)

பகைப்புலனுணுகியுய்த்தார்பகர்ந்ததுபகர்ந்துபற்றார்
மிகைப்புலனடக்கிமெய்ம்மைவிளம்புதல்விரதம்பூண்ட
தகைப்புலக்கருமத்தோரைக்கோறலிற்றக்காரார்க்கும்
நகைப்புலன்பிறிதுண்டாமேனங்குலகவையுண்டாமே. (கசச)

முத்தலையெஃகன்மற்றைமுராரிதன்முனிவன்முன்னு
அத்தலைநம்மைகோளுவமார்க்குநகையிற்றுமால்
ஏத்தலையுலகங்காக்கும்வேந்தரீவேற்றேவ
இத்தலையெய்தினுனைக்கொல்லுதலிழுக்கமின்னும். (கசடி)

இளையவடன்னைக்கொல்லாதிருசெவிமூக்கொடீர்த்து
வினைவுரையென்றுலிட்டார்வீரராய்மெய்ம்மையோர்வார்
கனைதியேலாவிரம்பாவிவன்வந்ததகண்ணிற்கண்ட
வளவுரையாமற்செய்தியாதியென்றமையச்சொன்ஞன். (கசசு)

கல்லதரைத்தாய்கம்பியிவனவைசெய்தானேயானுலும்
கொல்லல்பழுதேபோயிடைகூறிக்கொணர்திகடிதென்ஞத்
தொல்லைவாலிமூலமறச்சுட்டுகலரைச்சூழ்போச்சி
எல்லைகடக்கவிடுமின்களென்ருனின்ருரிரைத்தெழுந்தார். (கசஎ)

ஆயகாலத்தயன்படையோடிருப்பவாகாதனலிடுதல்
தூயபாசமெனப்பலவுங்கொணர்த்துபிணிமின்ரேனென்ஞ

* விபீஷணன் (சத்தியத்திற்கஞ்சி) பலவிதமாகப் பயப்படுவன்.

மேயதெய்வப்படைக்கலத்தைவிட்டானமரர்போர்வென்றான்
ஏயெனுமுன்னிடைபுக்குத்தொடைவன்கயிற்றுற்பிணித்தீர்த்தார். ()

நாட்டினகரினடுவுள்ளகயிறாவிலுந்தகைமையவே
வீட்டினுசனெடும்பாசமற்றதேரும்விரிதறந்த
மாட்டும்புரவியாயமெலாமருவிவாங்குந்தொடையழித்த
பூட்டும்வல்லின்மூட்டோடும்புரசையிழந்தபோர்யானை. (கசக)

மண்ணிற்கண்டவானவரைவலியிற்கவர்ந்தவரம்பெற்ற
எண்ணற்கரியவேனயரையிகலிற்பறித்தமகிமையந்த
பெண்ணிற்கிசையுமவ்கலத்திற்பிணித்தகயிறேயிடைபிழைத்த
கண்ணிற்கண்டவன்பாசமெல்லாமிட்டுக்கட்டினர். (கஉ0)

கடவுட்படையைக்கடந்தறத்திஞ்சுகடந்தேனுகாமே
வீடுவித்தளித்தார் * தெவ்வரேவென்றேனன்றேவிவர்வென்றி
சூடுவிக்கின்றதிவ்வூரைச்சுடுகென்றுரைத்ததுணிவென்று
நடுவுற்றமையவுறநோக்கிமுற்றுமுவர்தானவையற்றான். (கஉக)

கொய்யபாசம்புரம்பிணிப்பநோன்மையிலன்போலுணங்கி
வெய்யவரக்கர்புறத்தலைப்பவீடுமுணர்க்தேவிரைவில்லா
லையன் † வீஞ்சைதனேயறிந்தமறியாதான்போலவிஞ்சையெனும்
பெரும்யமெய்போனடிக்கின்றயோகிபோன்றான்போகின்றான். (கஉஉ)

வேர்த்தகோயில்வாயிலொடுவிரைவிற்கடந்துவெள்ளிடையின்
போர்த்துபுறநின்றிரைக்கின்றபொறைதீர்மறவர்புறஞ்சுற்ற
ஏத்துகெடுவால்கிழிசுற்றிமுற்றுந்தோய்த்தாரிழுதெண்ணெய்
காத்துகெடுத்தீக்கொளுத்தினரார்த்தாரண்டம்கடிகலக்க. (கஉங)

ஒக்கவொக்கவுடன்விரித்தவலப்பிலாதவுரப்பாசம்
பக்கம்பக்கமிருகூறுய்ந்தூருயிரவர்பற்றினர்
புக்கபடைஞர்புடைகாப்போர் ‡ புணரிக்கணக்கர்புறஞ்செல்வோர்
திக்கினளவாலயனின்றுகாண்போர்க்கெல்லேதெரிவரிதால். (கஉச)

அந்தகருவ்கடிகாவுமழிவித்தக்கன்முதலாயோர்
சிந்தனுறிச்சேதையொடும்பேசுமனிதர்திறஞ்செப்ப
வந்தகுரவ்கிற்குற்றதனேவம்மின்சாணவம்மென்று
தந்தந்தெருவும்வாயிறுறும்யாருமறியச்சாற்றினர். (கஉஞ)

ஓர்த்தாரண்டத்தப்புறத்துமறிவிப்பார்போலங்கோடிங்
கேர்த்தார்மூசமெற்றினரிடித்தார்தெழித்தாரெம்மருக்கும்
மார்த்தாரோடிச்சானகிக்கும்பகர்த்தாரவளுமுயிர்பதைத்தாள்
வேர்த்தாளுலக்தாள்விம்மினுள்விழுத்தாளழுதாள்வெய்துயிர்த்தாள். ()

---

* தெவ்வர்-பகைவர்.
† வீஞ்சை-ஞானம்.
‡ புணரி-சமுத்திரம்-பத்துலக்ஷங்கோடி.

*தாயேயனேயகருணேயான் * தணேயேயேதுர்தகவில்லா
காயேயனேயவல்லரக்கர்கலியக்கண்டானல்காயோ
நீயேயுலகுக்கொருசான்றுநிற்கேதெரியுக்கற்பதனில்
தாயேனென்னிற்றெழுகின்றேனெரியேயவனேச்சுடலென்றாள். (கஉள)

வேறு.

வெஞ்சுத்தமென்னகையவள் விளம்புமேல்வையின்
ஒளித்தவெங்கனலவனுள்ளமுட்கினுன்
தளிர்த்தனமயிர்புறஞ்சிலிர்ப்பத்தண்மையால்
குளிர்த்ததக்குரிசில்வாலென்புகூரவே. (கஉஅ)

வேறு.

மற்றினிப்பலவென்வேலைவடவனல்புவியளாய
† கற்றையங்கனலிமற்றைக் ‡ காயத்தீமுனிவர்க்காக்கும்
மூற்றுறு § மும்மைசெந்தீமுப்புரமுருக்கச்சுட்ட
கொற்றவனெற்றிக்கண்ணின்வண்ணியுங்குளிர்த்தவன்றே. (கஉக)

அண்டமுங்கடர்தானங்கையனலியுங்குளிர்த்ததங்கிக்
குண்டமுங்குளிர்த்தீமகத்தருமெலாங்குளிர்த்தகொற்றச்
சண்டவெங்கதிரவாகித்தழங்கிருண்மிழுங்குதாவில்
மண்டலங்குளிர்த்தமீனாகரகமுங்குளிர்த்தமாதோ. (கஉம)

வெற்பீனுலியன்றதன்னமேனியையிழுங்கிவெந்தீ
கிற்பினுஞ்சுடாதுதின்றநீர்மையையினேவிழுங்கி
அற்பிஞரருதிசிந்தையனுமனுஞ்சனகன்பாலை
கற்பினுலியன்றதென்பான்பெரியதோர்களிப்பனுனன். (கஉக)

அற்றையவ்விரவிற்றுன்றனதிவினுன்முழுதுமுன்னப்
பெற்றிலனெனினுமாண்டொன்றுள்ளதுபிழையுருமே
மற்றுறுபொறிமுன்செல்லமறைத்துசெல்லறிவுமானைக்
கற்றிலாவரக்கர்தாமேகாட்டலிற்றெரியக்கண்டான். (கஉஉ)

முழுவதுந்தெரியகோக்கிமுற்றுமூர்முடிவிற்சென்றுன்
வழுவுறுகாலமீதென்றெண்ணினன்வலிதிற்பற்றித்
தழுவினனிரண்டுநூறுயிரம்புயத்தடக்கைதாம்போ
டெழுவெனகாலவிண்மேலெழுந்தனன்விழுந்தவெல்லாம். (கஉங)

இற்றவாளரக்கர்தூரூயிரவருமிழந்ததே ளார்
முற்றினருலந்தாரையங்மொய்ம்பினேடுலைமுழக்கச்

---

* அக்கினிக்குச் சகாயன் வாயுவாகலாலே வாயுபுத்திரனுக்கு நீ துணையாக வேண்டுமென்று துணையே யென்றுள்.

† கற்றையங்கனலி-பௌமனென்னும் சுவாலாக்கினி.

‡ காயத்தீ-ஔதாரியமென்னு மக்கினி.

§ மும்மைச்செந்தீ-காருகபத்தியம் ஆகவநீயம் தட்சிணாக்கினி.

சுற்றியகயிற்றினேகித்தோன்றுவானரவின்சுற்றம்
பற்றியதுழனென்னப்பொலிக்தனன்விசும்பின்பாலான். (கஉச)

தின்னலர்புரத்தைமுற்றுஞ்சுடுதொழிற்றெல்லோனும்
பன்னியபொருளுராணப்பாதகரிருக்கைபற்ற
மன்னனேவாழ்த்திப்பின்னேவயங்கெரிமடுப்பெனென்னப்
பொன்னகர்மீதேதன்போர்வாலினேப்போகவிட்டான். (கஉஙி)

தன்னிறைக்குறுகண்வெய்யோர்தாமியற்றலுங்கேட்டின்னே
அன்னவர்க்கிறுதியாகவணிகரழிப்பலென்னுச்
செற்றச்சிகையவெம்போர்மழுப்பின்னர்ச்சேறலொக்கும்
அன்னிறத்தண்ணறுதானனல்கெழுசாற்றினேவால். (கஉசு)

அப்புறம்வேலேதாறுமலங்குபேரிலங்கைதன்னே
எப்புறத்தனவுந்தீயெவாருகணத்தெரித்தகோட்பால்
துப்புறழ்மேனியண்ணல்மேருவிறகுழையத்தோளால்
மூப்புரத்தெய்தகோலேயொத்ததம்மூரிப்போர்வால. (கஉஎ)

உகக்கடையுலகம்யாவுமுணங்குறவொருதன்னுட்டம்
சிகைக்கொழுங்கனலேவீசுஞ்செயன்முனம்பயில்வான்போல
மிகைத்தெழுதீயராயோர்விரிநகர்வீயப்போர்வால்
தகைத்தலிஞேன்மைசாலுந்தனிவீரன்சேணிலுய்த்தான். (கஉஅ)

வெள்ளியிற்பொன்னினுனவிளங்குபொன்மணியின்மிஞ்சை
தெள்ளியகடவுட்டச்சன்கைமுயன்றிதிற்செய்த
தள்ளமுமனேகடோறுமுறைமுறைதாவிச்சென்ரூன்
ஒள்ளரியோடெங்குன்றத்தூழிவீழுருமொடொப்பான். (கஉக)

நீனிறநிருதரீண்டுகொய்பொழிவேள்விநீங்கிப்
பால்வருபயெனென்பான்மாருதிவாலேப்பற்றி
ஆலமுண்டவனன்றூட்டவுலகெலாமழிலினுண்ணும்
காலமேயென்னமன்னுகனலியங்கடிஞினுன்டான். (கசo)

கஉ-வது, பிணிவீட்டுபடலம் - முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉஅ.

கச-வது, இலங்கையெரியூட்டுபடலம்.

கொடியைப்பற்றிவிதானங்கொளுத்தித்தான்
றெடியதூணேத்தழுவிநெஞ்சுவர்
முடியச்சுற்றிமுழுதுமுருக்கிற்ருல்
கடியமாமனேதோறுங்கடுக்கணல். (க)

வாசலிட்டவெரிமணிமாளிகை
மூசமுட்டிமுழுதுமுருக்கலால்
* ஊசலிட்டனவோடியுலந்தூளப்
பூசலிட்டவிரியற்புரமெலாம். (உ)

மணியினியவயங்கொளிமாளிகை
பிணியிற்செஞ்சுடர்க்கற்றைபெருக்கலால்
திணிகொடியுற்றதுற்றிலதேர்கிலார்
அணிவலக்கைகல்லாரலமந்தனர். (கூ)

வானகத்தைவெம்புகைமாய்த்தலால்
போனகத்தமர்பலசித்திய
தேனகத்தமயிலன்னகாட்சியார். (ஸ)

கூய்க்கொழுங்கனல்குஞ்சியிற்கூந்தலில்
மீச்சொரிந்தனமாதரும்வீரரும்
ஏய்த்ததன்மையினுலெரியின்மையும்
தீக்கொளுந்தினவுந்தெரிகின்றிலார். (ஙி)

இல்லிற்றங்குவயங்கெரியாவையும்
சொல்லிற்றீர்ந்தனபோல்வனதொல்லூருப்
புல்லுக்கொண்டனமாயைப்புணர்ப்பறக்
கல்லித்தம்மியல்பெய்துங்கருத்தர்போல். (சு)

ஆயதற்கொர் † குறளுருவாயடித்
தாயனந்தலகங்கடாக்கொள்வான்
மீயெழுந்தகரியவன்மேனியில்
போயெழுந்தபரந்ததலெம்புகை. (எ)

நீலமின்றிரித்தனகீழ்நிலை
மாலின்வெஞ்சினயானையமானுவ
மேல்லிமுள்தொரிமுற்றுமிமுங்கலால்
தோலுரித்துகமுன்றனதோலெலாம். (அ)

மீதிமங்கலந்தாலன்னவெம்புகை
சோதிமங்கலத்தியொடுசுற்றலால்
மேதிமங்குலின்வீழ்புனல்வீழ்மட
வோதிமங்களின்மாதரொதுங்கினர். (கூ)

பொடித்தெழுந்துபெரும்பொறிபோவன
இடிக்குலங்களின்வீழ்தலுமெங்கணும்

* ஊசலிட்டன...மெலாம்-கெருப்புக்குப் பயந்து வெளியே போகிறதும் பிள்ளைமுதலியவைகளை நினைந்து திரும்பவருகிறதுமாயின என்க.
† குறளுரு-வாமனவடிவு.

வெடித்தவேலவெதும்பிடமீன்குலம்
துடித்தவெந்துபுலர்ந்துயிர்சோர்ந்தவால். (கo)

பருகுதீமடித்துள்ளுறப்பற்றலால்
அருகுநீடியவாடகத்தாரைகள்
உருகிவேலையினூடுபுக்குற்றன
திருகுபொன்னெடுந்தண்டிற்றிரண்டவால். (கக)

உரையின்மூன்துலகுண்ணுமெரியதால்
வரைகிவத்தனபன்மணிமாளிகை
நிரையினீணெடுஞ்சோலையினிற்குமோ
தரையும்வெந்ததுபொன்னெனுந்தன்மையால். (கஉ)

கல்லினும்வலிதாம்புகைக்கற்றையால்
எல்லிபெற்றதிமையவர்நாடியல்
வல்லிகோலிகிவத்தனமாமணிச்
செல்லியோடுந்திரண்டனதேரெலாம். (கங)

பேயமன்றினினின்றுபிறங்கெரி
மாயருண்டகறவுமடித்ததால்
நாயரென்றவர்வைகிடந்துன்னிஞல்
தீயரன்றியுந்தீமையுஞ்செய்வ * ரால். (கச)

தழுவிலங்கைதழுங்கெரிதாய்ச்செலீஇ
வழுவில்வேலையுலையின்மறுகின
எழுமெழுஞ்சுடர்க்கற்றைசென்றெய்தலால்
குழுவுதண்புனன்மேகங்கொதித்ததே. (கடி)

ஊனிலோடுமெரியொடியங்குவார்
கானிலோடுகெடும்புனல் † காணெஞ
வானிலோடுமகளிர்மயங்கினர்
வேனிலோடருந்தேரிடைவீழ்ந்தனர். (கசு)

தேனவாம்பொழிதீப்படச்சிந்திய
சோணமாமலர்த்தும்பிதொடர்ந்தயல்
போனதீச்சுடர்புண்டரிகத்தடங்
கானமாமெனவீழ்ந்துகரிந்ததே. (கஎ)

நற்கடன்னிதுகம்மூயிர்காயகன்
மற்கடந்தெதமாண்டனன்வாழ்விலம்
இற்கடந்தினியேகலம்யாமெனு
மிற்கடந்தநுதற்சிலர்வீடினர். (கஅ)

* ஆல்-இது ஆச்சரியம். † காண்-முன்னிலையசை.

பூக்கரிக்குமுறிபொறியாயடை
நாக்கரிக்குசினேகறுஞ்சாம்பராய்
மீக்கரிக்குகெடும்பணைவேருறக்
காக்கரிக்குகருங்கரியானவே (கக)

கார்முழுக்கவெழுங்கனற்கற்றைபோய்
ஊர்முழுக்கவெதுப்பவருகின
சோரொழுக்கமருமையிற்றுன்றுபொன்
வேர்விடிப்பதுபோன்றனவிண்ணெலாம். (க0)

செருக்கமீயிசையொக்கசெருப்பெழச்
செருக்கும்வெண்கதிர்த்திங்களேச்சென்றுற
உருக்குமெய்யினமுதமுருத்தலால்
அரக்கருஞ்சிலராவிபெற்றாரரோ. (உக)

பரிதிபற்றிமிர்ந்தெழுபைங்கனல்
கருகிமுற்றுமெரிக்தெழுகார்மழை
அருகுசுற்றுமிருந்தையதாயதின்
உருகுபொற்றிரளொத்தனஞெண்கதிர். (உஉ)

தலைகொளுத்தியதாவெரிதாமணி
முளைகொளுத்திமுகத்திடைமொய்த்தபேர்
உளைகொளுத்தவுலர்த்துலவுற்றன
வளைகுனப்பின்மணிறிறவாசியே. (உங)

எழுந்துபொற்றலத்தேறலினீன்புகைக்
கொழுந்துசுற்றவுயிர்ப்பிலர்கோளுமுற்
றழுந்துபட்டளரொத்தயர்ந்தாரழல்
வீழுந்துமற்றினர்கூற்றைவிழுங்குவார். (உச)

* கோசிகத்துயிலுற்றகொழுங்கனல்
தூசினுத்தரிகத்தொடுசுற்றுறு
வாசமைக்குழல்பற்றமயங்கினர்
பாசிழைப்பரவைப்படரல்குலார். (உஇ)

வேறு.

நிலலிலக்கியதுகிலினேருப்புணர்நிருதர்
இலலினுஞ்சிலமுத்துளவெனுகையனேயார்
புலலியின்கரைகண்டவரமுதகப்புணரும்
கலலியின்கரைகண்டிலர்மண்டினர்கடன்மேல். (உசு)

பஞ்சரத்தொடுசுரிறக்ஞிவெக்துபதைப்ப
அஞ்சனக்கணினருவிநீர்முலேமுன்றிலலேப்பக்

* கோசிகத்துயில்-பட்டுச்சீலை.

குஞ்சரத்தனகொழுங்கரைத்தழுவுறுங்கொதிப்பால்
மஞ்சுறப்புகுமின்னெனப்புகையிடைமறைந்தார். (உஎ)

வரையினேப்புரைமாடங்களெரிபுகமகளிர்
புரையில்பொற்கலன்விசும்பிடைவில்லிடப்போவார்
கரையினுட்புகைப்படலையிற்கரிந்தனர்கலங்கித்
திரையினுட்பொலிசித்திரப்பாவையின்செயலார். (உஅ)

அகருமஞ்ஞறுஞ்சாந்தமுமுதலியவனேகம்
புகரினன்மரத்ததுவெறியுலகெலாம்போர்ப்பப்
பகருமூழியிற்காலவெங்கடுங்கனல்பருகும்
மகரவேலையின்வெந்தனர்தனவனங்கள். (உக)

மினேப்பரந்தெழுகொழுஞ்சுடருலகெலாம்விழுங்க
னினேப்பரும்பெருந்திசையுரவிரிகின்றநிலையால்
சினேப்பரந்தெரிசேர்ந்திலகின்றவஞ்சிலவும்
கனற்பரந்தவற்றெரிகிலகற்பகக்கானம். (உ0)

மூளும்வெம்புகைவீழுங்கலிற்சுற்றுறமுழுநீர்
மாளும்வண்ணமாமலரெடுத்தலரெதாமயங்கிப்
பூளையீயன்னபோவனபுணரியிற்புனன்மீன்
மீளயாவையுந்தெரிந்திலமுகிற்கணமிசைய. (உக)

மிக்கவெம்புகைவீழுங்கலின்வெள்ளியங்கிரியும்
ஒக்கவெற்பிலேடன்னமுங்காக்கையினுருவ
பக்கவேலையின்படியதுபாற்கடன்முடிவில்
திக்கயங்களுங்கயங்களுமேவற்றுமைதெரியா. (உஉ)

கரிந்துசிந்திடக்கடுங்கனரெடர்ந்துடல்கதுவ
உரிந்தமெய்யினரோடினர்மீனிடையொளிப்பார்
விரிந்தகூந்தலுங்குஞ்சியுமிடைதலிற்றுமும்
எரிந்துவேகின்றவெனத்தனவெறிதிரைப்பரவை. (உஊ)

மருங்கின்மேலொருமகவுகொண்டொரு * தனிமகவை
அருங்கையாற்பற்றிமற்றொருமகவுபின்னரற்ற
நெருங்கிஞெரேடுநெறிகுழல்சுறுக்கொளநீக்கிக்
கருங்கடற்றலைவீழ்ந்தனரரக்கியர்சதரி. (உசை)

வில்லும்வேலும்வெங்குந்தமுமுதலியவிறகாய்
எல்லுடைச்சுடரெனப்புகையெங்கெலாமுருங்கித்
தொல்லோன்னிலேதொடர்ந்துபேருணர்வன்னதொழிலால்
சல்லியுண்டையிற்றிரண்டனபடைக்கலச்சாலை. (உஇ)

* தனி-(கைப்பிள்ளையை) நேராகாத.

செய்தொடர்க்கழல்வல்லியும்புரசையுஞ்சிந்தி
கொய்தினிட்டவன்றறிபறித்துடலெரிமுழைய
மொய்தடச்செலிறுத்திவான்முதுகினின்முறுக்கிக்.
கையெடுத்தமைத்தோடினவோடைவெங்களிமா. (கூ9)

வெருளும்வெம்புகைப்படலையின்மேற்செலவெருவி
இருளும்வெங்கடல்விழுந்தெனவெழுந்திலபறவை
மருளின்மீ ணகணம்விழுங்கிடவுலந்தனமனத்தோர்
அருளில்வஞ்சரைத்தஞ்சமென்றடைந்தவரனைய. (கூஎ)

கீரைவற்றிடப்பருகிமாதெடுகிலக்தடவித்
தாருவைச்சட்டிமலைகளைத்தழற்செய்ததனிமா
மேருவைப்பற்றியெரிகின்றகாலவெங்கனல்போல்
ஊரைமுற்றுவித்திராவணண்மனைபுக்கதுயர்தீர். (கூஅ)

வானமாதருமற்றுளமகளிருமறுகிப்
* போனபோனதிக்கறிகிலரனைவரும்போனூர்
ஏனைநின்றவரெங்கணுமிரிந்தனரிலங்கைக்
கோனவானவர்பதிகொண்டானெனக்குலைத்தார். (கூக)

காவியுந் † கறுங்கலவையுங்கற்பகக்கப்
பூவுமாரமுமிலுமென்றினையனபுகையத்
தேவுதேன்மழைசெறிபெருங்குலமெனத்திசையிற்
பாவைமார்கறுங்குழல்களும்பரிமளங்கமழ்ந்த. (சஂ0)

சூழும்வெஞ்சுடர்தொடர்ந்திடயாவருந்தொடரா
வாழிவெஞ்சினத்தாண்டொழிலிராவணண்மனையின்
ஊழிவெங்கனலுண்டிடவுலகமென்றுயர்ந்த
எழும்வெந்தனவெரிந்தனதெடுதியேயெழும். (சக)

பொன்றிருத்தியதாயதாலிராவணண்புரைதீர்
குன்றமொத்துயர்தடமெடுமாதிலைக்கோயில்
கின்றதற்றெரிபருகிடதெரிவுறவுருகித்
தென்றிசைக்குமோர்மேருவுண்டாமெனத்தெரிந்த. (சஉ)

அனையகாலையினரக்கனுமரியையர்குழுவும்
புனைமணிப்பொலிபுட்பகவிமானத்துப்போனூர்
நினையுமாத்திரையாவருநீங்கினர்கினையும்
வினையிலாமையின்வெந்ததவ்விலங்கன்மேலிலங்கை. (சக)

ஆழித்தேரவனரக்கரையழலெழநோக்கி
எழுக்கேழெனவடுக்கியவுலகங்களெரியும்

---

* போனபோன திக்கறிகிலர்-போனபோன ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு திசைகளிலேபோய்ப் புகைக்கம்மலாலே இன்னதிசை வந்தோமென் றறிந்திலர். † கறுங்குழல்-இயற்கைமணமுள்ள கூந்தல்.

மழிக்காலம்வர்துற்றதோபிறிதுவேறுண்டோ
ராழித்தீச்சுடவெர்தனென்னகரெனப்பகர்ந்தான். (சச)

ரக்கள்கூப்பினர்தங்ளோதிருவொடுங்காணர்
நாக்குகின்றவல்லரக்கரீதியம்பினரிறையோய்
நாக்கவேலியினெடியதன்வாலிட்டதழலால்
நாங்குசுட்டதீதென்றலுமிராவணன்கொதித்தான். (சடி)

ன்றுகொல்குரக்கன்னதிவ்வலியுளதிலங்கை
ன்றுவெந்தமாநெழுகின்றதுதெருப்புத்
ன்றுதேக்கிடுகின்றதுதேவர்கள்சிரிப்பார்
ன்றுகன்றுபோர்வலியெனவீரர்வணங்கான். (சசு)

வேறு.

உண்டநெருப்பைக்
கண்டனர்பற்றிக்
கொண்டனெகென்றான்
அண்டரைவென்றான். (சஎ)

உற்றகலாமுன்
கற்றகுரங்கைப்
பற்றுமினென்றான்
முற்றுமுனிந்தான். (சஅ)

சாரயனின்றார்
வீரர்விரைந்தார்
நேருதுமென்றார்
தேரினர்சென்றார். (சக)

எல்லியிகந்தார்
வில்லர்வெகுண்டார்
பல்லதிகாரத்
தொல்லர்தொடர்ந்தார். (கo)

வேறு.

நீர்கெழுவேலைமிர்ந்தார்
தார்கெழுதானைசமைந்தார்
போர்கெழுமாலைபுனைந்தார்
ஒருழுவீரருயர்ந்தார். (கக)

விண்ணினைவேலைவிளிம்பார்
மண்ணினையோடிவளைந்தார்
அண்ணலைாடியனைந்தார்
கண்ணினின்வேறயல்கண்டார். (கஉ)

பற்றுதிர்பற்றுதிரென்பார்
எற்றுதிரெற்றுதிரென்பார்
முற்றினர்முற்றுமுனிந்தார்
கற்றுணர்மாருதிகண்டான். (இக)

வில்கொடுவஞ்சரெதிர்ந்தார்
கால்கொடுகைகொடுகார்போல்
வேல்கொடுகோலினர்வெஃகி
வால்கொடுதானும்வளைந்தான். (இச)

பாதவமொன்றுபருத்தான்
மாதிரம்வாலின்வளைத்தான்
மோதினன்மோதமுனிந்தார்
ஏதியுராளுமிழுந்தார். (இஇ)

நூறிடமாருதிகொந்தார்
ஊறிடவூனிடுபுண்ணீர்
சேறிடவூடுசெந்தீ
ஆறிடவோடினதாரூய். (இசு)

தோற்றினர்துஞ்சினரல்லார்
எற்றிகல்வீரரெதிர்ந்தார்
காற்றின்மகன்கலைகற்றான்
கூற்றினுமும்மடிகொன்றான். (இஎ)

மஞ்சுறழ்மேனியர்வன்றாள்
மொய்ம்பினவீரர்முடிந்தார்
ஐம்பதினாயிரரல்லார்
பைம்புனல்வேலைபடிந்தார். (இஅ)

தோய்ச்சனன்வாலதிதோயாச்
சாய்ச்சினவேலைகலந்தார்
போய்ச்சிலர்பொன்றினர்போனார்
ஏச்செனமைந்தரெதிர்ந்தார். (இக)

சுற்றினதேரினர்தோலா
வித்ருழில்வீரம்விளைத்தார்
எற்றினன்மாருதியெற்ற
உற்றெழுவோருமுலந்தார். (கo)

* விட்டியர்விஞ்சையர்வெஃகி
வட்டமுலைத்திருவைகும்
புட்டிரான்சோலைபுறத்தும்
சுட்டிலதென்பதுசொன்னார். (கக)

* விண்டு விட்டு என வலித்தல்.

வந்தவர்சொல்லமழிந்தான்
வெந்திறன்வீரன்வியந்தான்
உய்ந்தனெனென்னவுயர்ந்தான்
பைந்தொடிதான்கள்பணிந்தான். (கூஉ)
பார்த்தனள்சானகிபாரா
வேர்த்தெரிமேனிகுளிர்ந்தாள்
வார்த்தையென்வந்தனேயென்னப்
போர்த்தொழின்மாருதிபோனான். (கூக)
தெள்ளியமாருதிசென்றான்
கள்ளவரக்கர்கள்கண்டால்
எள்ளுவர்பற்றுவரென்ன
ஒள்ளெரியோனுமொளித்தான். (கூச)

கச-வது, இலங்கையெரியூட்டுபடலம்-முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-கஉடுக.

கடு-வது, * திருவடிதொழுதபடலம்.

நீங்குவெண்விரைவினென்னுநேவினன்மருங்குகின்ற
தாங்கொருகுடுமிக்குன்றையருக்கனினனைத்தவையன்
வீங்கினலகையெல்லாம்விழுங்கினனென்னவீரன்
பூங்கழலொழுதுவாழ்த்திவிசும்பிடைக்கடிதுபோனான். (க)
† மைந்நாகமென்னகின்றகுன்றையுமரபினெய்திக்
‡ கைந்நாகமனையோனுற்றதுணர்த்தினன்கணத்தின்காலைப்
§ பைந்நாகநிற்கும்வீரர்தன்னெவரவுபார்க்கும்
‖ கொய்ந்நாகமுறுத்தேன்சிந்துகுன்றிடைக்குதியுங்கொண்டான். (உ)
போய்வருங்கருமமுற்றிற்றென்பதோர்பொம்மல்பொங்க
வாய்வெரீஇன்றவென்றிவானரவீரர்மன்னே
பாய்வருளேத்தாக்கணிருந்தனபறவைப்பார்ப்புத்
தாய்வரக்கண்டதன்னவுவகையிற்றளிர்த்தாரம்மா. (ங)
அழுதனர்சிலவர்முன்னின்ஞர்த்தனர்சிலவரண்மித்
தொழுதனர்சிலவராடித்துள்ளினர்சிலவரள்ளி
முழுதுறவிழுக்குவார்போன்மொய்த்தனர்சிலவர்சுற்றும்
தழுவினர்சிலவர்கொண்கைமைந்தனர்சிலவர்தாங்கி. (ச)

* திரு-மேன்மை; அழகு. அடி-பாதம். அணுமாலுக்குத் திருவடி என்ற பெயர். † மைந்நாகம்-மைந்நாகமலை. ‡ கைந்நாகம்-யானை. § பைந்நாகம் - படமுள்ளபாம்பு. ‖ கொய்ந்நாகம் - (மலர்) பறிக்கும் புன்னைமரம்.

தேனெழுகுங்காபுரியனவரிதிற்றேடி
மேன்முறைவைத்தேமண்ணுனுகர்த்தனேமெலிவுதீர்த்தி
மானவாண்முகமோங்கட்குரைத்ததுமாற்றமென்று
தானுயர்சாகமெல்லாமுறைமுறைசிலவர்தந்தார். (இ)

தாள்களின்மார்பிற்றோளிற்றலையினிற்றடக்கைதம்மில்
வாள்களின்வேலிற்கோலின்மழையினின்வருத்தபுண்கள்
நாள்கண்மேலுலகிற்சென்றவெண்ணனேம்பிக்கண்ண
ஊழ்கொளநோக்கிநோக்கியுயிருகவுளேற்துயிர்த்தார். (ஈ)

வாலிகாதலனேமுன்தைவணங்கினெண்கின்வேந்தைக்
காலுறப்பணிந்துபின்னேக்கடன்முறைகடவோர்க்கெல்லாம்
மேலுறவியற்றியாங்கணிருந்திவணிருந்தோர்க்கெல்லாம்
ஞாலாராயகன்றன்றேவிசொல்லினணன்மையென்றான். (உ)

என்றலுங்கங்கள்கூப்பியெழுந்தனரிறைஞ்சித்தாழா
தின்றனருவகைபொங்கவிம்மலாளிபிர்த்தநெஞ்சர்
சென்றதுமுதலாவத்திறுதியாச்செப்பற்பாலே
வன்றிறலுரவோயென்னச்சொல்லினன்மருத்தின்மைந்தன். (அ)

ஆண்டகைதேவியுன்னத்தருந்தவமமையச்சொல்லிப்
பூண்டபேரடையாளங்கைக்கொண்டதும்புகன்றபோரில்
மீண்டவாளரக்கரோடிகிழ்ந்ததுகெருப்புச்சிந்தி
மீண்டதும்விளம்பான்றான்றன்வென்றியையுரைப்பவெள்கி. (கூ)

பொருதமைபுண்ணேசொல்லவென்றமைபோர்த்தண்மை
உரைசெயவூர்தியிட்டதோய்திரும்புகையையோதக்
கருதலர்பெருமைதேவிமீண்டிலாச்செயலேகாட்டத்
தெரிதரவுணர்ச்தேம்பின்னரென்னினிச்செய்துமென்றார். (கூ)

யாவையுமினியவேறெண்ணல்வேண்டுவதிறையுமில்லை
சேவகன்றேவிதன்னைக்கண்டமைவிரைவிற்செப்பி
ஆவதவ்வண்ணமுள்ளத்தருந்துயராற்றலேயாம்
போவதுபுலமையென்னப்பொருக்கெனவெழுந்துபோனார். (கூ)

போயினர்களிப்பினோடும்புகலன்சிலையினின்றும்
எயினபகழியென்னவெழுந்துவிண்படர்ந்ததாவிக்
காய்கதிர்க்கடவுள்வானத்தச்சிசென்றிறுக்குங்காலத்
தாய்வரும்வீரரும்போய்மதுவனமதிலிறுத்தார். (கூ)

ஏதுகாளிறத்தசாலலென்பதோர்வருத்தநெஞ்சத்
தாதலா * னுணர்வுதீர்த்துவருத்தினமனியமெம்மைச்

* உணர்வுதீர்தென்றால்-பொசிப்பில்லாமலென்க.

சாதநீர்த்தளித்தவீரதக்தருஞணவுமென்னப்
போதுநாம்வாலிசெய்பாலென்றுடனெழுந்துபோனர். (கூ)

அங்கதன்றன்னையண்மியனேவருமிருகைகூப்பிக்
கொங்குதங்கலங்கன்மார்பின்னுடைக்குரக்குச்சேனை
வெங்கதமொழித்துசாலவருந்தினவேடையோடி
இங்கிதத்களித்தல்வேண்டுமிருலுயிழ்ப்பிரசமென்ரூர். (கசு)

நன்றெனவவனுநேர்ந்தானரலியுரங்கவார்த்துச்
சென்றுறுபிரசத்தூங்குஞ்செழுவனமதனிஞ்டே
ஒன்றின்மூனெஞ்றுபாயுமொடிக்குமென்பிரசமெல்லாம்
தின்றுதின்றுவகைகூருந்தேனுகரளியின்மொய்த்தே (கஙி)

ஒருவர்வாய்க்கொள்ளுந்தேனையொருவருண்டெளிதிற்போவார்
ஒருவர்கைக்கொள்ளுந்தேனையொருவர்கொண்டோடிப்போவார்
ஒருவரோடொருவரொன்றத்தழுவுவர்விழுவரோடி
ஒருவர்மேலொருவரேறியாகையென்றவகைகூர்வார். (கசு)

இன்னணங்கழுங்ஙலெயிலிழித்தெழுந்துநீறி
அன்றெடுஞ்சோலைகாக்கும்வானரரவரைதோக்கி
மன்னெடுங்கதிரோன்மைந்தனுணையமறுத்துரீயிர்
என்னினோன்தென்செய்தீர்மன்னும்முயிர்க்கிறதியென்ன. (கஙு)

முனியுமாலெம்மையெங்கோனென்றவர்மொழித்துபோந்து
கனியுமாமதுவனத்தைக்கட்டழித்திட்டதின்று
கனிதருகவியின்ருனோகண்ணலார்செய்கைகாண
இனியெம்மாற்செயலின்றென்னுத்தநிமுகற்கியம்பினரே. (கஅ)

கேட்டவன்யாவரேயம்மதுவனங்கேடுசூழ்ந்தார்
காட்டிரென்றெழுந்தானன்னுர்வாலிசேய்முதலகற்ரூர்
ஈட்டம்வர்நிறுத்ததாகவங்கதனேவறன்னல்
மாட்டினகலியின்ருனேமதுவளருலவவீட்டம். (கக)

உரங்கினர்மதுகையான்றனுணையாலுறுதிகொண்டே
குரங்கினர்தம்மையெல்லாம்விலக்கினக்கொடுமைகூறிக்
கரங்களாலெற்றகொர்தேக்காவலோயென்னலோடும்
தரங்கினர்தாதைபட்டதறிந்திலன்றனையன்போலும். (உ0)

எனவுரைத்தனலிற்பொங்கியெழுந்திரைத்திரண்டகோடி
தனைகழற்கவியின்சேனைகல்லெனக்கலக்துப்பல்லப்
புனைமதுச்சோலைபுக்கான்மதுமதுகரப்புனிதச்சேனை
அனகனேவாழ்த்தியோடியங்கதனடியின்வீழ்ந்த. (உக)

இந்திரன்வாலிக்கீந்தவின்சுவைமதுவின்கானம்
அந்தரத்தவர்க்குமோக்கற்கரியவென்ஞணைதன்னைச்

செந்நினைகதிரோன்மைந்தன் றிறலினையறியினன்றே
மன்னரமனையதோளாயிற்றதன்வாழ்க்கையின்றே. (உஉ)

மதுவனந்தன்னையின்னேமாட்டெவித்தனீயென்னுக்
குதுமெனவாலிசெய்மேலெறிற்தனன்கருங்கற்பாறை
அதுதனப்புறக்கையாலெயகற்றியங்கதனுஞ்சீறித்
ததிமுகன்றன்னைப்பற்றிக்குத்தினன்றடக்கைதன்னுல். (உக)

வாய்வழிகருதிசோரமணிக்கையான்மலங்கமோதிப்
போய்மொழிகதிரோன்மைந்தற்கென்றவன்றன்னைப்போக்கித்
தீயெழும்வெகுளிபொங்கமற்றவன்சேனைதன்னைக்
காய்கனல்பொழியுங்கையாற்குத்துதிர்கட்டியென்ருன். (உச)

பிடித்தனர்கொடிகடம்மாற்பிணித்தனர்பின்னுமுன்னும்
இடித்தனரசனியஞ்சவெறுழ்வலிக்கரங்களோச்சித்
துடித்தனருடலஞ்சோர்த்தார்சொல்லும்போய்நீருமென்னப்
படித்தனன்வாலிமைந்தன்பயத்தனவரும்போனர். (உடு)

அலைபுனல்குடையுமாபோன்மதுக்குடைந்தாடித்தத்தம்
தலைவர்கட்கினியதேனுங்களிகளுமபிறவுந்தந்தே
உலைவுறுவருத்தந்தீர்த்திட்டுபவனத்திருந்தாரப்பால்
சிலைவனைத்துலவுந்தேரோன்றெறும்வெயிறணிவுபார்த்தே. (உசு)

மூத்தலையெஃகினற்குமுடிப்பருக்கருமமுற்றி
யீத்தகன்றூதுமீண்டதிறுதியாய்வினைந்ததன்மை
யாத்தலையறிந்தவெல்லாமறைத்தனமாழியான்மாட்
டோத்தலிகிழ்ந்தவெல்லாமியம்புவானெடுத்துக்கொண்டாம். (உஎ)

வேறு.

சேற்றிளமரைமலர்த்திருவைத்தேர்கெனக்
காற்றின்மாமகன்மூதற்கவியின்சேனையை
ஆற்றிசைமருங்கினுமேவிகாயகற்
றேற்றினனிருந்தனன்கவியின்செம்மலே. (உஅ)

கார்வரையிருந்தனன்கதிரின்காதலன்
சிரியசொற்களிற்றெருட்டச்செங்கணுன்
ஆருயிராயிரமுடையனுமெனச்
சோர்தொறுஞ்சோர்தொறுமுயிர்த்துத்தோன்றினனுன். (உக)

தண்டலினெடுந்திசைமூன்றுந்தாயினர்
கண்டிலர்மடந்தையையென்னுங்கட்டிரை
உண்டியிரகத்தெனவொறுக்கவும்முனன்
றிண்டிறலனுமனோனியுஞ்சென்றையான். (கூ0)

ஆரியனருத்தயர்க்கடலினஞ்பவன்
சீரியதன்றாஞ்செய்கைதீர்வரும்
பூரியவெம்பழிபொடித்ததாமெனச்
சூரியன்சிறுவனோக்கிச்சொல்லினான். (கக)

சூறித்தகாளிகந்தனகுன்றத்தென்றிசை
வெறிக்கருங்குழலியாடன்மேயினர்
மறித்திவண்வந்திலர்மாண்டனார்கொலோ
பிறித்தவர்க்குற்றுளதென்னேபெற்றியோ. (கஉ)

மாண்டனளவளிவண்மாண்டவார்த்தையை
மீண்டவர்க்குரைத்தலின்விளிதனன்றெனப்
பூண்டதோர்துயர்கொடுபொன்றினர்கொலோ
தேண்டினரின்னமுந்திரிகின்றரர்கொலோ. (கங)

கண்டனரரக்கரைக்கறுவுகைம்மிக
மண்டமர்தொடங்கினர்வஞ்சர்மாயையால்
விண்டலமதனின்மேயினர்கொல்வேறிலாத்
தண்டலினெடுஞ்சிறைத்தனப்பட்டார்கொலோ. (கச)

கூறினகாளவரிருக்கைகூடலம்
ஏறலஞ்சுதுமெனவின்பதுன்பங்கள்
ஆறினரருத்தவமயர்கின்றரர்கொலோ
வேறவர்க்குற்றதென்விளம்புவாயென்றான். (கஇ)

என்றுரைத்திடருழந்திருக்குமேல்வையில்
வன்றிறற்றறிமுகன்வானரேசன்முன்
தன்றலைப்பொழிதருகுருதிதன்னெடும்
குன்றெனப்பணிந்தனனிருகைகூப்பியே. (கஈ)

எழுந்தகின்றையகேளின்றுகாளையோ
டழிந்ததமதவனமடையவென்றலும்
வழிந்திடுகுருதியின்வதனநோக்கியே
மொழிந்திடங்கியாதமுடித்துளோரென. (கஎ)

நீலனுங்குமுதனுகெடியகுன்றமே
போலுயர்சாம்பனும்புணரிபோர்த்தென
மேலெழுசேனையும்விரைவின்வந்தரசர்
சால்புடைமதுவனந்தனையழிப்பவே. (கஅ)

தகைந்தவச்சேனையைத்தள்ளிகின்னேபும்
இகழ்ந்தரைத்தியைத்தனன்வாலிசேயைமக்
குகந்தனுகன்றவல்வுரைபொருமையே
புகைந்தொருபாறையின்புணர்ப்புரீக்கியே. (கக)

இமைத்தன்முன்வாலிசேயெழில்கொள்யாக்கையைச்
சமைத்தியென்றெறிதரப்புறங்கையாற்றலைத்
தமைத்தருகனலெனவழன்றெற்பற்றியே
குமைத்தயிர்பதைப்பரீகூறபோயென்ருன். (உ0)

ஏம்பலொடெழுந்தனின்றிரவிகான்முளை
பாம்பணையமலனவணங்கிப்பைந்தொடி
மேம்படுகற்பினென்னுமெய்ம்மையைத்
தாம்புகன்றிட்டதிச்சலமென்ரேதினுன். (உக)

பண்டருளெவியாடன்னைப்பாங்குறக்
கண்டனரன்னதோர்களிப்பிஞலவர்
வண்டுறைமதுவனமழித்துமார்திய
தண்டாரயகவினியவலந்தீர்கென. (உஉ)

வந்தனர்தென்றிசைவாலிஞரெனப்
புந்திநொந்தென்னைகொல்புகலற்பாலரென்
றெந்தையுமிருந்தனனிரவிகான்முளை
கொந்தவத்தருமகன்றன்னைநோக்கியே. (உங)

யாரவணிறுத்தவரியம்புவாயென
மாருதிவாலிசேய்மயிந்தன்சாம்பவன்
சோர்வறுபதினெழுவோர்க்குன்னிஞர்
* ஆர்கலிதாணவந்தார்க்குஞ்சேனையார். (உச)

என்றவனுரைத்தபோதிரவிகாதலன்
வன்றிறற்றதிமுகன்வதனநோக்கியே
ஒன்றனக்குணர்த்துவதனதுவாலிசேய்
புன்றெழிற்செய்கைசேர்புணர்ப்பனல்லஞல். (உஇ)

கொற்றவன்பணிதலைக்கொண்டுதெண்டிரை
சுற்றியதிசையெலாந்தருவித்தோகையைப்
பற்றியபகைஞரைக்கடிந்துபாங்கர்வந்
தற்றனரவரையாமுரைப்பதென்னையே. (உசு)

அன்றியும்வாலிசேயரசதாதலின்
பின்றுதறீதரோபிணங்குஞ்சிறையாய்
ஒன்றுரீயுணரலியுறுதிவேண்டுமேல்
சென்றவன்றனைச்சரண்சேர்திபீண்டென. (உஎ)

வணங்கியசென்னியன்மறைத்தவாயினன்
உணங்கியசிந்தையனெடுங்குமேனியன்

---

* ஆர்கலி-சமுத்திரம்.

கணங்களொடேகியக்கானகண்ணிஞன்
மணங்கிளர்தாரிஞன்மறித்தும்வந்தாேர். (சஅ)

கண்டனன்வாலிசேய்கறுவுகைம்மிக
விண்டவனம்மெதிர்மீண்டுளானெனின்
உண்டிருதுமுயிரென்னவுன்னிஞன்
தொண்டெனத்திருமகன்றொழுதுதான்றினுன். (சக)

போழ்தனயான்செய்தகுறைபொறுக்கெனு
வீழ்தனதடிமிசைவீழுவாலிசேய்
தாழ்துகைபற்றிமெய்தழீஇக்கொண்டும்மையான்
சூழ்தலும்பொறுக்கெனுமுதன்மைசொல்லினுன். (கo)

யாமுதற்குறித்தநாளிறத்தலெண்ணியே
ஏமுறத்தியர்துடைத்தளித்தவேற்றம்போல்
தாமரைக்கண்ணவன்றுயரந்தள்ளநீர்
போமெனத்தொழுதமுன்னுமன்போயினுன். (கக)

வன்றிறற்குரிசிலுமுனிவுமாறினுன்
வென்றிகொள்கதிருந்தன்வெம்மையாறினுன்
என்றுகொண்டியாவருமெழுந்துபோதலே
நன்றெனவேஞர்கவைக்கணீங்கினுர். (கஉ)

இப்புறத்திராமனுமிரவிசேயினை
ஒப்புறநோக்கிவந்தற்றதானையர்
தப்பறக்கண்டனமென்பரோதகா
தப்புறத்தென்பரோவறைதியாலென்றான். (கஙு)

என்புழியனுமனுமிரவியென்பவன்
தென்புறத்துளனெனத்தெரிவதாயினுன்
பொன்பொழிதடக்கையப்பொருவில்வீரனும்
அன்புறுசிந்தைய * னமையநோக்கினுன். (கசை)

எய்தினனனுமனுமெய்தியேந்தறன்
மொய்கழறொழுதிலன்முளரிநீங்கிய
தையலைநோக்கியதலையன்கையினன்
வையகந்தழீஇநெடிதிறைஞ்சிவாழ்த்தினுன். (கூடி)

திண்டிறலவன்செயதெரியநோக்கினுன்
வண்டியலோதியும்வலியண்மற்றிவன்
கண்டதுமுண்டவள்கற்புமன்றெனக்
கொண்டனன்குறிப்பினுணருங்கொள்கையான். (கடு)

* அமைய என்பது-குறிப்புத்தோன்றவெனக் கொள்க.

ஆங்கவன்செய்கையையளவையாமெனு
ஒங்கியவுணர்வினுலுலோகத்துன்னினுன்
* வீங்கினன்ரோள்புனல்கண்கள்விம்மினன்
நீங்கியதருத்துயர்காதலீண்டதே. (இ)

கண்டனென்கற்பினுக்கணியைக்கண்களால்
தெண்டிரையேகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினித்திறத்தியையும்
பண்டளதுயருமென்றனுமன்பனுவான். (அ)

வேறு.

உன்பெருந்தேவியென்னுமுரிமைக்குமுன்னேப்பெற்ற
மன்பெருமருகியென்னும்வாய்மைக்குமிலேமன்னன்
தன்பெருந்தனையையென்னுந்தகைமைக்குந்தலைமைசான்றுள்
என்பெருந்தெய்வமையாலின்னமுங்கேட்டியென்பான். (இக)

பொன்னலதில்லேப்பொன்னேயொப்பெனப்பொறையினின்றுள்
தன்னலதில்லேத்தன்னேயொப்பெனத்தனக்குவந்த
நின்னலதில்லேநின்னேயொப்பெனினைக்குரோர்த்தாள்
என்னலதில்லேயென்னேயொப்பெனவெனக்குமீந்தாள். (கூ)

† உன்குலமுன்னதாக்கியுயர்புகழ்க்கொருத்தியாய
தன்குலந்தன்னதாக்கித்தன்னேயித்தனிமைசெய்தான்
வன்குலவெங்கூற்றுக்கீந்தவ்வானவர்குலத்தைவாழ்வித்
தென்குலமெனக்குத்தந்தாளென்னினிச்செய்வதெம்மோய். (கக)

வீற்பெருந்தடந்தோள்வீரலீங்குநீரிலங்கைவெற்பின்
நற்பெருந்தவத்தளாயநங்கையைக்கண்டேனல்லேன்
இற்பிறப்பென்பதொன்றுமிரும்பொறையென்பதொன்றும்
கற்பெனும்பெயரதொன்றுங்களிநடம்புரியக்கண்டேன். (கூ)

‡ கண்ணினுமுளேநீதையல்கருத்தினுமுளேவாயின
எண்ணினுமுளேநீகொங்கையிணைக்குவைதன்னினெவ்வா
தண்ணல்வெங்காமனெய்தவலரம்புதொளேத்தவாறுப்
புண்ணினுமுளேநின்னேப்பிரிந்தமைபொருந்திற்றுமோ. (கூக)

வேலையுளிலங்கையென்னும்விரிகடலொருசார்விண்டோய்
காலையுமாலேதானுமில்லதோர்கனக்கற்பச்
சோலையக்கதனினும்பிபுல்லினற்றெழுத்தனைய
சாலையினிருந்தாளேயதவஞ்செய்ததவமாந்தையல். (கூச)

---

* தோள்வீங்கினன்-புஜங்கள் பூரித்தார். † பிராட்டியினுடைய கலங்காநிலையினுலே ராட்சதர்களுக்கழிவும் மற்றெல்லாருக்கு நன்மையுமே உண்டாயிற்றென்று கருத்து. ‡ இதன்கருத்து பிராட்டி உண்மைப் பிரியவில்லே யென்பதாம்.

மண்ணெடுக்கொண்டுபோனன்வானுயர்கற்பிஞடன்
புண்ணியமேனிதீண்டவஞ்சுவானுலகம்பூத்த
கண்ணகன்கமலத்தண்ணல்கருத்திலாட்டொதெல்கண்ணின்
எண்ணருங்கூறய்மாய்தியென்றதோர்மொழியுண்டென்பான். (கூடி)

தீண்டிலனென்னும்வாயமைதிசைமுகன்செய்தமுட்டை
கீண்டிலதனந்தனுச்சிழிந்திலதெழுந்துவேலை
மீண்டிலசுடர்கள்யாவும்விழுந்திலவேதஞ்செய்கை
மாண்டிலதென்னுந்தன்மைவாய்மையாணர்திமன்னோ. (கூசு)

சோகத்தாளாயதங்கைகற்பிஞற்றெழுதற்கொத்த
மாகத்தார்தேவிமாரும்வான்சிறப்புற்றமற்றைப்
பாகத்தாளிப்போதீசன்மகுடத்தாள்பதுமத்தாளும்
ஆகத்தாளல்லண்மாயனுயிரமெளலிமேலாள். (கூஎ)

இலங்கையமுழுதுநாடியிராவணனிருக்கையெய்திப்
பொலங்குழையவரையெல்லாம்பொதுவறநோக்கிப்போந்தேன்
அலங்குதண்சோலைபுக்கேனவ்வழியணங்கனுளேக்
கலங்குதெண்டிரையிற்றுயகண்ணிவீர்க்கடவிற்கண்டேன். (கூஅ)

அரக்கியரளவற்றுருமலகையின்குழுவுமஞ்சச்
செருக்கினல்கண்டுசெய்யமெய்க்ரனறீக்கச்சீர்த்த
இரக்கமென்றொன்றுதானேயெய்திழைவடிவமெய்தித்
தருக்கியசிறையுற்றன்னதகையளத்தமியளம்மா. (கூக)

மாண்பிறந்தமைந்தகற்பின்வாணுதனின்பால்வைத்த
சேண்பிறந்தமைந்தகாதல்கண்களிற்றெவிட்டித்தீராக்
காண்பிறந்தமையாணியேகண்ணகன்ஞாலத்தன்னுள்
ஆண்பிறந்தமைந்தசெல்வமுண்டனையாதியன்றே. (எ0)

அயிர்ப்பிலர்காண்பார்முன்னுமறிந்திலரெனினுமைய
வெயிற்புனையிலங்கைமூனு * ரிக்திரன்யாக்கைக்கேற்ற
மயிற்புனையியலினருமைந்தருளுமாங்கே
உயிர்ப்பொடுமெயிரிஞ்மூசனின்றுவொரும். (எக)

தையலேலவணங்கற்கொத்தவிடைபெறுத்தன்மைநோக்கி
ஐயாளிருத்தகாலையலங்கல்வேலிலங்கைவேந்தன்
எய்தினனிரத்தகூறியறைஞ்சினனிருத்தங்கை
வெய்துரைசொல்லச்சீறிக்கோறன்மேற்கொண்டெழிட்டான். (எஉ)

---

* இந்திரனியற்கைக்கு என்னும் பாடம்.

ஆயிடையணங்கின்கற்புமையறின்னருளுஞ்செய்ய
தாயல்லதனுமென்றிங்கினையனதொடர்ந்துகாப்பப்
போயினனரக்கிமாரைச்சொல்லுமின்பொதுவினென்ருங்
கேயினனவரெலாமென்மக்திரத்துறங்கியிற்ருர். (எக)

அன்னதோர்பொழுதினங்கையாருயிர்துறப்பதாக
உன்னினன்கொடியொன்றேந்திக்கொம்பொடுமுறைப்பசுற்றித்
தன்மணிக்கழுத்திற்சார்த்துமளவையிற்றடித்துகாயேன்
பொன்னடிவணங்கிகின்றுகின்பெயர்புகன்றபோழ்தில். (எச)

வஞ்சனையரக்கர்செய்கையிதுவெனமனக்கொண்டேயும்
அஞ்சனவண்ணத்தான்றன்பெயருரைத்தளியையென்பால்
துஞ்சுறுபொழுதிற்றந்தாய்துறக்கலென்றுவந்துசொன்னுள்
மஞ்சனவனமென்கொங்கைவழிகின்றமழைக்கணீராள். (எடி)

அறிவினிற்றேறிச்சொன்னபேரடையாளம்யாவும்
செறிவுறகோக்கிகாயேன்சிந்தையிற்றிருக்கமின்மை
முறிவதவெண்ணிவண்ணமோதிரங்காட்டக்கண்டாள்
இறுதியினுயிர்தந்தீயுமருந்தொத்ததனையதெந்தாய். (எசு)

ஒருகணத்திரண்டுகண்டேனுளிமணியாழியான்ற
திருமுலேத்தடத்துவைத்தாள்வைத்தலுஞ் * செல்வன்பால்
விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினுல்வெந்
தருகியதுடனேயாறிவலித்ததுகுளிர்ப்புள்ளூற. (எஎ)

வாங்கியவாழிதன்னைவஞ்சரூர்வந்ததாமென்
ருங்குயர்மழைக்கணீராலாயிரங்கலசமாட்டி
ஏங்கினளிருந்ததல்லாலியம்பலனெய்த்தமேனி
வீங்கினள்வியக்ததல்லாலிமைத்திலளுயிர்ப்புவிண்டாள். (எஅ)

அன்னவர்க்கடியனேனிற்பிரிந்தபினெடுத்தவெல்லாம்
சொன்முறையறியச்சொல்லித்தோகைகீயிருக்தருழல்
இன்னதென்றறிகிலாமேயித்தனைதாழ்த்ததென்றே
மன்னனின்வருத்தப்பாடுமுணர்த்தினேனுயிர்ப்புவந்தாள். (எக)

இங்குளதன்மையெல்லா † மியையுளியையக்கேட்டாள்
அங்குளதன்மையெல்லாமடியனுக்கறியச்சொன்னுள்
திங்களொன்றிருப்பெனின்னேதிருவுளக்தீர்த்தபின்னே
மங்குலெனுயிரொடென்றுன்குரைகழற்றலைக்கண்வைத்தாள். (அ0)

---

* செல்வ-ஓ மஹப்பிரபு. † இயைபு உளி-கிரமப்படியே.

5440a

வைத்தபின் முகிலின்வைத்தமா * மணிக்கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதினீந்தாடாமரைக்கண்களார
வித்தகராண்டியென்றுகொடித்தனன்வேதன்னால்
உய்த்துளகாலமெல்லாம்புகழொடுமொக்கநிற்பான். (அக)

பைப்பயப்பயந்தகாமம்பரிணமித்துயர்ந்துபொங்கி
மெய்புறவெதும்பியுள்ளமெலிவுறுலையைவிட்டான்
ஐயனுக்கங்கிமுன்னரங்கையாற்பற்றுங்கை
கையெனலாயிற்றன்றேகைபுக்கமணியின்காட்சி. (அஉ)

பொடித்தனவுரோமம்போற்துளிப்பதனகண்ணீர்பொங்கித்
துடித்தனமார்புந்தோளுந்தோன்றினியிரவின் முள்ளி
மடித்ததமணிவாயாலிவருவதுபோவதங்கித்
தடித்ததுமேனியென்னேயாருளர்தண்மைதேர்வார். (அஙூ)

ஆயிடைக்கவிகளோமெங்கதன்முதலினூயோர்
மேயினர்வணங்கிப்புக்கார்வீரனைக்கவியின்வேந்தைப்
போயினகருமமுற்றிப்புகுந்ததோர்பொம்மறன்னல்
சேயிருமதியமென்னத்திகழ்தருமுகத்தராஞர். (அசு)

ஆண்டையினருக்கன்மைந்தனேயகேளரிவைதம்பால்
காண்டலுக்கெளியளாஞளென்றலுங்காலந்தாழ
ஈண்டியுமிருத்திபோலாமென்றனனென்றலோடும்
தூண்டிரண்டனையதோளான்பொருக்கெனவெழுந்துசொன்னன்.(அடு)

எழுகவெம்படைகளென்றானேயெனுமளவினெங்கும்
முழுமுரசெற்றிக்கொற்றவள்ளுவர்முடிக்கமுந்திப்
பொழிதிரையன்னவேலேபுடைபரக்தென்னப்பொங்கி
வழுவலில்வெள்ளத்தானேதென்றிசைவளர்ந்ததன்றே. (அசு)

நீலனேடிதுநோக்கிநேமியோன்பணிப்பானத்தம்
பால்வருஞ்சேனைதன்னேப்பகைஞர்வந்தடராவண்ணம்
சால்புறமுன்னர்ச்சென்றுசரிநெறிதுருவிப்போதி
மால்தருகளிறுபோலும்படைஞர்பின்மருங்குசூழ. (அஎ)

என்றுரைத்தெழுந்தவேலைமாருதியிருகைகூப்பிப்
புன்றொழிற்குரங்கெனுதென்றோளிடைப்புகுதியென்னத்
தன்றலேபடியிற்றாங்கிதானண்ணலுஞ்சரணம்வைத்தான்
வன்றிறல்வாலிசேயுமிளவலேவணங்கிச்சொன்னன். (அஅ)

---

* மணிக்கரசை - சூடாமணியை.

நீயினியென்றன்றேரண்மேலேறிமலவென்ன
வாய்புனைத்திறைஞ்சின்றவாலிகாதலனோர்கி
காயகற்கினேயசோவுகன்றெனவவன்றன்றேரண்மேல்
பாய்தலுர்தகைப்பிரானேபடர்கெடப்பர்த்ததன்றே. (அக)

கருடனில்விடையிற்றேன்றுமிருவருங்கடப்பக்காலின்
அருடருகுமான்றேரண்மேலக்கதனலக்கற்றேரண்மேல்
பொருடரும்வீரர்போகப்பொங்கொளிவிசும்பிற்றங்கும்
தெருடரும்புலவர்வாழ்த்திச்சிந்தினர்தெய்வப்பொற்பூ. (கூ0)

வையகமதனின்மாக்கண்மயங்குவர்வயவெஞ்சேனை
ஏய்திடினென்பதுன்னியிராகவனிகினேவப்
பெய்கனிழிழங்குதேனென்றினேயனபெறுதற்கொத்த
செய்யமால்வரையேயாரூச்சென்றனதகைப்பில்சேனை. (கூக)

வீரரும்விரைவிற்போனர்வீலங்கன்மேலிலங்கைவெய்யோர்
சோர்விலாக்காவற்பாடிம்பெருமையுமரணுங்கொற்றக்
கார்கிறத்தரக்கரென்போர்முதலியகணிப்பிலாத
வார்கழலனுமன்சொல்லவழிசெடிதெளிதிற்போனர். (கூஉ)

அக்கெறிகெடிதுசெல்லவரிக்குலத்தரசனேகெ
ன்னெறிக்குமரர்போகநயந்துடன்புணர்ந்தசேனே
இன்னெடும்பவழக்குன்றிற்பகலெலாமிறுத்தபின்னர்ப்
பன்னிருபகலிற்றென்றுதென்றிசைப்பரவைகண்டார். (கூங)

கதி-வது, திருவடிதொழுதபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஉசச.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளே சரணம்.

ஆஞ்சநேயர் திருவடிகளே சரணம்.

சுந்தரகாண்டம் முற்றிற்று.

சுந்தரகாண்டம்.

படலங்களின் அட்டவணை.

க - வது.	கட்டுரைப்படலம்	பக்கம்.	ரூ
உ ,,	ஊர்தேடுபடலம்	,,	கடு
ங ,,	காட்சிப்படலம்	,,	சச
ச ,,	நிந்தனைப்படலம்	,,	டுங
ஞ ,,	உருக்காட்டுபடலம்	,,	சச
சு ,,	சூடாமணிப்படலம்	,,	எஅ
எ ,,	பொழிலிறுத்தபடலம்	,,	அஅ
அ ,,	கிங்கரர்வதைப்படலம்	,,	கக
க ,,	சம்புமாலிவதைப்படலம்	,,	கoங
கo ,,	பஞ்சசேனபதிகள்வதைப்படலம்	,,	கoக
கக ,,	அட்சகுமாரன்வதைப்படலம்	,,	ககஎ
கஉ ,,	பாசப்படலம்	,,	கஉங
கங ,,	பிணிவீட்டுபடலம்	,,	கங்க
கச ,,	இலங்கையெரியூட்டுபடலம்	,,	கசஎ
கஞ ,,	திருவடிதொழுதபடலம்	,,	கஞஞ